காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சென்னை – 2.
முதல்வர் அவர்களின் செயல்முறைகள்
முனைவர் (திருமதி). டே.பிரிடா ஞான ராணி. எம்.எஸ்சி., எம்.பில்., பிஎச்.டி.,

ந.க.எண். 2017/பி/2018 நாள்: 26-10-2018

பொருள் : சென்னை – 2, காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி (தன்னாட்சி) – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தட்டச்சர்கள் தொகுதி IV தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது – பணி வரன்முறை செய்து - ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலர் கடித எண்: 5651/PSD-A2/2017 நாள்: 03-10-2017
2. கல்லூரிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்: 40510/பி1/2017 நாள்: 16-10-2017.
3. இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்: 2666/பி/2017 நாள்:25-10-2017
4. கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்:40510/பி1/2017 நாள்: 08-10-2017.

பார்வை (1)-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் திரு. எஸ். அசோக்குமார் என்பார் தட்டச்சராக தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து, பார்வை (2)-ல் காணும் கல்லூரிக்கல்வி இயக்குநர் செயல்முறைகளில் இக்கல்லூரிக்கு திரு. எஸ். அசோக்குமார், என்பாரை தட்டச்சர் காலி பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டது.

பார்வை (3)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளில் திரு. எஸ். அசோக்குமார் என்பாரை இக்கல்லூரியில் காலியாக உள்ள தட்டச்சர் பணியிடத்தில் பணியில் சேர பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. பணிநியமன ஆணையை தொடர்ந்து அன்னார் இக்கல்லூரியில் 01-11-2017 முற்பகல் தட்டச்சராக பணியில் சேர்ந்தார்.

பார்வை (4)-ல் காணும் கல்லூரிக்கல்வி இயக்குநர் கடிதத்தில் தட்டச்சராக பணிபுரியும் திரு. எஸ். அசோக்குமார் என்பாரை கீழ்க்கண்ட நிபந்தனைகளை தெரிவித்து பணிவரன்முறை ஆணை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

``இப்பணிவரன்முறை தொகுதி IV 2015-16 பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இக்கல்லூரியில் தட்டச்சராக பணிபுரியும் திரு. எஸ். அசோக்குமார் என்பார் பணியில் சேர்ந்த நாளான 01-11-2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

ஜெ. யமுனாராணி 26/10/18

முதல்வர்
காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி (த),
சென்னை – 2.

26/10/18

பெறுநர்

1. திரு.எஸ். அசோக்குமார்,
   தட்டச்சர்,
   காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி (த),
   சென்னை-2.

2. உபரி – 2.

E/Osf16-17/B/Admin/Typist

Scanned with OKEN Scanner